59

ACL-JNAL
00063

Q23:417
N26
176795

உ

கணபதி துணை.

திரிசிரபுரம்

அயன் இராஜபார்ட்டு

டி. வி. ஆர். சின்னசாமி பிள்ளை அவர்களியற்றிய

# திருவண்ணாமலை ஜோதிப்பிரகாச மகிமை

அல்லது

# சிவபஜனை கீர்த்தனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 OCT 1926
MADRAS

இஃது

சூளை - மாணிக்க நாயகரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை சூளை

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1926 [விலை அணா 3.

# முக்கிய அறிவிப்பு.

17695

**கண்ணோக்கு விடமெல்லாம் கடவுள் காப்பு.**

என்று அகத்தியர் திருவாய் மலர்ந்தபடி இகபரங்களுக்கும் சொந்தக்காரன் எவனோ, இருவினைக்கும் எட்டாதவன் எவனோ, பொதுவானவன் எவனோ, பிறப்புக்கும் இறப்புக்கும் பெரியவன் எவனோ, உடலுக்கும் உயிருக்கும் உரியவன் எவனோ, கூட்டமான எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவபேதங்களையும் ஊட்டி வளர்ப்பவன் எவனோ, ஆட்டிப் படைப்பவன் எவனோ, கடலானவன் எவனோ, காற்றானவன் எவனோ, மேகமானவன் எவனோ, லோகமானவன் எவனோ, மலையானவன் எவனோ, சிலையானவன் எவனோ, உயிர் நாதன் எவனோ, உடல் நாதன் எவனோ, பல புவனங்களும் பல அண்டங்களும் சூழப்பெற்று அளவுகடந்த அண்டாண்ட பிரமாண்ட அகண்டாகார புவன சராசரங்களுக்கெல்லாம் பெரியவன் எவனோ, ஏக சக்கிராதிபதி எவனோ, பிறவாதவன் எவனோ, இறவாதவன் எவனோ, ரிஷீச்வரர்களால் சிந்திக்கப்பட்டவன் எவனோ, சர்வ தேவர்களாலும் துதிக்கப்பட்டவன் எவனோ, பதிவ்ரதைகளால் நினைக்கப்பட்டவன் எவனோ, உத்தமிகள் உள்ளத்திலிருக்கும் உயர் நலமுடையவன் எவனோ, அப்பேர்க்கொத்த அப்பனது ஒப்பற்ற திருவடி கமலங்களை உள்ளமென்னும் கோயிலில் அமரச் செய்து அன்பென்னும் வெள்ளத்தினால் அபிஷேகித்து அவாவென்னும் மலரினால் அர்ச்சித்து ஆத்தமென்னும் தீபமேற்றி, அபயமென்னும் மணி அடித்து, ஆசையென்னும் நைவேதனம் செய்துத் தியானமென்னும் தியாகம் கேட்டு, மோனமென்னும் வீடு பெற்று, ஞானமென்னும் பூமிக்குள் குடியேறுமாறு எல்லாம் வல்ல கடவுளை அல்லும் பகலும் யோசித்து நேசித்து அடியேன் அறிவுக்கு எட்டியவாறு பாடியிருக்கும் பாடல்களில் இலக்கணம், இலக்கியம், இசை, தழை, தொடர் சீர், பிசகு இருப்பினும் கற்றோர்களும் உற்றோர்களும் கருணையுடையோரும் அருணகிரிநாதரைப்போல் எனையாதரிப்பீர்களென அனைவர்களின் கழலிணையைச் சிரமேற்கொண்டேன்.

இப்படிக்கு,

டி. வி. ஆர். சின்னசாமி பிள்ளை.

செஞ்சி தாலுக்கா அவலூர்பேட்டை வேதாந்த வித்வ
ஸ்ரீமான் தஞ்சையசெட்டியார் அவர்களியற்றிய

# சாற்றுக்கவி.

MADRAS 11 OCT 1926

## அறுசீர் விருத்தம்.

சீரோங்கும் திருவருளின் செயலோங்கும் அருணைதனில்
திருமால் வேந்தன்
மாரோங்கும் மயல்மணத் தோங்கு யாம்பாமென்
மயக்கம் நீங்கப்
பேரோங்கு மெழில்ஜோதிப் பிரகாசமா யோங்கு
பெருமான் றன்மேல்
பாரோங்கும் திருச்சிசின்ன சாமிப்பிள்ளை கீர்த்தனமாய்
பகர்ந்திட் டானால்.

## அவையடக்கம்.

அக்காலத் தமைச்சர்களின் தனைப்போல பாடுதற்கு
அருக னல்ல
இக்காலத் தமிழ்பூப ரிசைப்பதுபோ லிசைப்பதற்கு
இல்லேன் புல்லன்
எக்காலும் மருணேசன் திருவடியை மறவாதோன்
இயம்பு மீதில்
சிக்கான குறை யிருப்பின் தனைபொறுக்க பெரியோர்தாழ்
சிரமேற் கொண்டேன்.

## அவையடக்கம்.

### 1. கல்யாணம் செய்து வையுமே என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தானி பியாகு, தாளம் - ஆதி.

பல்லவி.

சந்தச்சரபமாமுத்து சங்கத்தின்வித்து சந்

அநுபல்லவி.

1 சுந்தரமானதோர் சொற்சுவைநேசன்
துலங்குமணிசங்கர தாசப்பிரகாசன்
செந்தமிழ்மாம்பள மரபினில்வாசன்
ஜெகம்புகழ்வேல்சாமி கவியருள்பாசன் சந்

2 பாஸ்கரசாமி தமிழ்மொழிசங்கம்
பாவலர்புகழ்பெரு சங்கரலிங்கம்
பேஷ்பதமெனவரு மாமுத்துலிங்கம்
பீர்முகமதுபத மேஅருந்தங்கம் சந்

3 வேலூர்நாராயண சாமிசொல்வாசம்
விகிசிதமாக விளங்குபதேசம்
பாலுந்தேனுமொழிக் கினிப்பிரகாசம்
பகர்சந்தானகிஷ்ட சாமிவுபாசம் சந்

4 அற்புதகவிசுப்ப ராயல்தன்பாடல்
அதிபுகளூருபெரு மானந்தமாடல்
பொற்புருபாவலர் தெரிசனங்கூடல்
புகழ்சின்னசாமிசொல் பதமதைதேடல் சந்

கணபதி துணை.

# திருவண்ணாமலை ஜோதிப்பிரகாச மகிமை

அல்லது

# சிவ பஜனை கீர்த்தனம்.

## விநாயகர் துதி.

வெண்பா.

கார்த்திகை ஜோதிப்பிர காசமென மாபெருகும்
கீர்த்தனையை தாரணியில் கீதமொடு—நேர்த்தியுறப்
பாடுதற்கு உள்ளமிருப் பார்வதியின் புத்திரனே
கூடுவிட் டகலாது கொடு.

## 2. பாலராமனையனே என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

நல்ல மருந்து அது வுள்
நாவுக்கு மேல்நடு மத்தியி லுள்ளது நல்ல

அநுபல்லவி.

1 வல்லையையோடு துலங்கிவருகுது
வானோர்கட்கெல்லாம் தானேமுதலது
சொல்குவேன்மறைபொருள் உள்ளபடியது
தோன்றுதுபார் வட்டநடு
மாடசுளி யானதது நல்ல

2 கயமுகசூரனை வென்றமருந்தது
கானகத்தில்குற மாதுபயந்தது
நயமாங்கனிக்குமுன் ஞல்வலம்வந்தது

நர்த்தன் சபாபதியின்
புத்திரனய் தோன்றினது நல்ல

3 கீதசங்கீத கிருபாநிதியது
கின்னார்முனிவரென் ளூம்துதிப்பது
மாதவர்போதவர் யாதவர்க்குவது

மத்தளந்தா ளத்துடன்
பக்தர்கள் கொண்டாடுமது நல்ல

4 செந்தமிழ்பாலன் சின்னசாமிசொன்னது
சீனிற்கற்கண்டுதேன் பால்போல்சுவைப்பது
எந்தநாளுமுது ராகயிருப்பது

இன்னமறி யாதவர்க்கு
சொன்னேனிதோ உண்மையது நல்ல

## சரஸ்வதி துதிவெண்பா.

வேதமறை போதனியே வித்தகர்க்கு முத்தமுதே
பாதச்சிலம் பொலிக்கும் பைங்கிளியே—பூதலத்தில்
ஜோதிப் பிரகாசமெனும் சொற்சுவை கீர்த்தனைக்கு
நீதமுற வென்னுளத்தே நில்.

## 3. பகாரியாலா என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

கன்னிகள்.

1 கமலவேணி நித்ய வேதகல்யாணி
விமலகார்த்திகைஜோதி ப்ரகாசகீர்தனி
வேண்டினேன்திரிசைசின்ன சாமிதியானி
பந்தி யானந் தஞானி
வித்தைக் கேபெருங் கியானி கமல

2 சங்கீதமாதி பொருள் தயாநிதி
மங்களகுணகரிவந் தாளுவாய்ததி
மானிலந்துதிக்குமலர் வாசகமாதி
மறை பேசுங் குணதி
திறை வீசும் மோகாதி

3 அருளின்நீயே கல்வி திருவருள்மாயே
நறுமலர்குவிக்கபிரமன் ஞவிலுற்றயே
நாதபோதகீதமாதி நாமம்பெற்றயே
உல காதாரம் தாயே
கலை யோதிஞய் நீயே கமல

4 சிறுவன்நாவில் லோதும் செந்தமிழில்
கருணைபூமலியால்நின்று காருமன்பினில்
கற்பகத்தருவல்லிக் காறணிதாவில்
போற்றி செய்தேநன் பாவில்
யேற்று கொள்ளுமின் பாவில் கமல

## 4. மன்றுளாடியவா என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆறுமுக வேலவா முருகா
ஆறுமுக வேலவா
மாருமட காணவுரு வேறுமுக மானதிரு ஆ

அநுபல்லவி.

1 கோறுமடியார் குறைகளை தீர்த்தவா
குஞ்சரத்தோளை வனத்திலழைத்தவா
ஏறுமயில்மீதி லேறிவருபவா
இழகிய பழனியி லுற்றிடும்
அழகிய வடிவேல் பெற்றிடும் ஆ

2 கல்லுங்கறையுமுன் னுள்ளங்கறையாதா
கண்டுயான்செய்தனுள் தொண்டுதான் போதாதா
அல்லும்பகலும் மறந்தேரியேன்சூதா
அயனைச் சிறையிட லாகின
கயனை வென்றோன் சோதரனே ஆ

3 பரமன்தனக்குப தேசமுறைத்தவா
பாலன்சின்னசாமி பாடற்குறித்தவா
சரவணபொய்கையில் தானேவுதித்தவா
சர்ஜனர் கொண்டாடி யுரும்
பச்சை மயிலேரி வரும் ஆ

## 5. தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஆறுமு கசுகனே ஆறுமு கசுகனே
அம்பாளானந்தம் உம்பர்க்கேகாந்தம் ஆ

அநுபல்லவி.

1 காருண்ய மானவேலா கர்ப்பகமெய்ப் பொருளின்பாலா
கானகத்தின்குற மாதுதனக்காக
மோனகுருபர ஞகதுலங்குக ஆ

தொகையறு.

ஆனந்தம॥னதிரு பரமகுருநாதனே
அசுரர் கோலாகாலனே
அண்டர்முனிவோர்களும் கண்டுனேவணங்கிட
அழகுமயி லேர்வீரனே

அநுபல்லவி எடுப்பு

2 தேனுபிஷேகனனே தேவர்க்கனுகூலனே
தித்திக்குஞ்செந்தமிழ் சின்னசாமிக்கருள்
முத்திக்குமுதல்வ ஞகதிருவருள் ஆ

## 6. அம்பிகா வுன்மகன் என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

கண்ணபிரானன் நாரணன்
புன்னைமரக் களேரினன்

அநுபல்லவி.

1 மண்ணுலகில் பிறந்துருண்டான்
மலையைகுடையாய் கொண்டான்
வெண்ணையைத் திருடியுண்டான்
வேத நாத போத கீதனன் கண்

2 பூதகிபால் குடித்தான்
புல்லாங்குழல் பிடித்தான்
சோதனையில் நடித்தான்
சூது மாது வாது சோதனன் கண்

3 கோபிகா ஸ்ரீகளுடன்
கூடியான துடன்
பாபிகளை வதைப்பாருடன்
பத்தர் சித்தர் முத்தர் கர்த்தனும் கண்

4 சீனி கற்கண் டின் சிகாமி
தேன்கவிந்த தெங்கும் பூமி
நானிலத்தில் சின்னசாமி
நாடி தேடி யாடி பாடிடும் கண்

## 7. துலங்கு செம்பொன் என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

அலங்கமேவிய கார்த்திகைதீபம் ஆகாயமே துலங்கும்
அண்ணாமலையான் ஜோதியே அதிவிகசிதமதிமுக
உண்ணாமுலையாள் க்யாதியே

அநுபல்லவி அடுக்குசந்தம்.

அண்டரும் கண்டுடன் தொண்டு புரிந்திட ஆகா
ஆகமங்களே விளங்கி யோக சித்தர் தான்துதிக்க ஆகா

சரணம்.

அற்புதமெய்ப் பொரு ளான தோர் காக்ஷி
ஆண்டிகள் கூட்டமு மதுபெருமாக்ஷி
தற்சர சிற்பர மாபெரும் சூக்ஷி
தயாபர ஞானதிரு வருளுரு சாக்ஷி
சாற்றும் சின்னசாமி போதன் சங்கரனுதன்
போற்றும் ரமண்ய சங்கீதன் அ

## 8. பாண்டியன் ஈன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம் - அமிர்த கல்யாணி, தாளம் - ஆதி.

பல்லவி.

1 அண்ணாமலை தீபத்தின் காக்ஷி கண்டோர்க்கு
அருள் தரும் சூக்ஷி
உண்ணாமுலை யோடுசிவ சாக்ஷி விளங்கும்
உலகில் பெரு மாக்ஷி அண்

தொகையரு.

அன்பர்கட்கன்பனுய் ஆண்டிநல்வேடமா
யானந்த மானதீரன்
உம்பர்கள்போற்றிட மோனகுருநாதனுய்
உலகினி லுதித்ததாரன்

பல்லவி எடுப்பு.

2 ஞானப்ர காசநிலை வாசன் ஜெனகர்
நால்வர்க் குப நேசன்
தீனத யாளனெனு மீசன் மானவர்
திரிபுரா வேசன் அ

தொகையரு.

மாலயன் காணுதற் கரிதாகவே யுலகில்
மாபெருவாக நின்ருேன்
காலனை யுதைத்துமார்க் கண்டனுக் கன்றுளில்
காக்ஷித்தர முயன்ருேன்

பல்லவி எடுப்பு.

3 சென்னல்சூழ் சிரபுர காசன் விளங்கும்
செந்தமிழ் வாசன்
என்னுளும் அன்பர்கள் தாசன் சின்னசா
மிருதய நேசன் அ

## 9. ஆனந்த மானந்தம் என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

ஆலய மாலய மாலயமே திரு
ஆலய மாலய மாலயமே

அநுபல்லவி.

அண்ணாமலை யாரின் கோவில்
விண்ணோர்கள் புகலும் புவியில் ஆ

சரணம்

1 மாலயன் காணாத மாமறை ஜோதி
மங்கள மெங்கும் விளங்கும் பிரக்யாதி
சாலோப சாரூப சாயுஜ்ய நீதி
சாதக மாதவ ரோதுநற் போதி ஆ

2 காணக் கிடையாத கைலாச நாதன்
கண்டு தெரிசனம் செய்வோர்க்கு போதன்
மோன மெனும்பர மானந்த வேதன்
முத்திக்கும் சித்திக்கும் மூர்த்திநல் கீதன் ஆ

3 ஆண்டிபண்டாரங்கள் கோடானகோடி
ஆனந்தம்பாடி வருவார்கள் நாடி
தாண்டவ சங்கீத நிர்த்தனம்பாடி
சத்தாதி தேவர்கள் பக்தி யுறுங்கோடி ஆ

4 கார்த்திகை தீபக் கருணைப்ர காசம்
காணா தவர்க்கரு ளாகாது நேசம்
சாஸ்திரசம்பன்ன ராயரு பாசம்
சாற்றும் சின்னசாமி ஞானப்ர வேசம் ஆ

## 10. கழுகுமலைக்குநாம் நேராய் என்ற மெட்டு.

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

அண்ணுமலைக்கு நாம் நேராய் சென்ருல்
ஆனந்த மானந்தங் காணலாம் வாராய் அ

அநுபல்லவி அடுக்கு சந்தம்.

1 அண்டருங் கண்டு வணங்கிடும்
தொண்டரும் நின்று பணிந்திடும் அ

2 அலைகட லுலகெழு வகைமுதல்
தொழுதிரு சரசிற முறபெறும் அ

3 அத்தர் முத்தர் சித்தர் பக்தர்
தத்தோம் தத்தோம் தத்தோ மென்றிடும் அ

4 அரகர சிவகுரு பரனென
திருவருணையி லுருபெரு மோன அ

சரணத்தொடர்.

1 காணக்கிடையாத கைலாசதீபம்
கண்டுதெரிசனம் செய்வோர்க்குலாபம்
ஆனந்தமாகு மனேவோர்க்குதூபம்
அரிவோமென வருவீர்களே
பரமானந்தம் பெருவீர்களே அ

2 செந்தமிழ்பாலன் திரிசைநகர்வாசன்
செப்புமொழிக்கரு ளானந்தநேசன்
எந்தநாளும்புல வோர்கள் விஸ்வாசன்
இனியதாய்சின்ன சாமிதுதி
கனிவாய்புக ளானபதி அ

## 11. சித்தாதி தேவர்கள் என்ற மெட்டு.

பல்லவி.

1 அண்ணாமலையானை கண்ணாலேகண்டுயான்
பொன்னுடென பணிந்தேன் வுலகில்
நன்னுடென சிறந்தேன்

ம கு ட ம்.

ஆணிமுத்துமாணிக்க முத்தார சித்திரபதக்கமே
யணிந்துமான்மழுவைதான் கரத்தில்தான்சடையில்
கங்கையையணிந்தசிவ சங்கரகுணநிதியே
அய்யாநின்திருவடியை பணிந்தேன்
மெய்யாகவுன் ஜோதியை அ

- வள்ளாளராஜன்தன் பிள்ளையென்றேவுல
கெல்லாம்புகழ்ந்திடவே மறைமுதல்
சொல்லாய் விளங்கிடவே

ம கு ட ம்.

வானுலகமேவியசிகரமலை மேலையிருபாதமதையே
வைகித்துஜோதிமயமாய் விளங்கும்மாதவப்பொருளே
வுனையேதவத்தினல் வணங்க
வஞ்சகதாசிகளை சோதித்தாய்
தஞ்சமென் மாதர்களை அ

3 மோனத்திலேதிரு ஞானத்திலேநல்ல
தியானத்திலே சிறந்தாய் கயிலைமலை
மேலோர்க்கருள் சுரந்தாய்

மகுடம்.

மோகனகுணவதிவுண்ணுமுலையை பாகமதிலேதரித்து
ஜோதிமயமாய்விளங்கும் மாதவப்பொருளே
வுனேயேதவத்திஞல் வணங்கும்
முன்ஞேர்பணி பாவனே சின்னசாமி
தன்னுள்ளம் வாழ்பவனே அ

## 12. ஆசிரிய விருத்தம்.

ஆதியெனும் ஜோதிபிரகாசஞ யோங்கு மொறு
வானந்த மானபரனே
அடியனெனே பலவாரு தனிலுருக வைத்துநீ
அரியாதிருப்பதேனே
நீதியுட னனுதினமு நினதுமல ரடியதனே
நினேயா திருந்ததுண்டோ
நீடூழி காலமாய் வாடினேன் தேடினேன்
நின்னெஞ்ச மிறங் காததேன்
பாதிமதி சடையனே யேதுயினி யுனேவிடேன்
பரமசுரூ பானந்தனே
பண்டார மாகியும் அண்டர்முனி வோர்களுற
பாலன்வடி வானகோனே
மேதினியில் திரிசைநகர் சின்னசாமிக் கருளும்
மேஞேர்க் குருவாசனே
மேகலேக ளணியு முண்ணுமுலேயின் நேசனே
மிதுததியி லெனேயாளுவாய்.

## 13. பூவிருந்திருவே என்ற மெட்டு.

இராகம் - வராளி, தாளம் - ஆதி.

பல்லவி.

1 திருவண்ணுமலையா வுன
தருளிறங்கலையா நல்ல
தேவருக்குரு மாதவப்பொரு ளேதவத்தினிலே வுதித்தனே

2 யாவரும் துதிக்க செழும்
பூமலர் சொரிக்க திரு
ஆகமக்கலை யேபொருத்திட யோகவப்பல ஞயுலகினில்

3 ஆதியின் பொருளே மறை
ஜோதியின்னருளே இனி
ஆழ்கடல்மீதி லேபடமுடி யாதுனக்கது தானடுக்குமோ

4 இனிதாய் ஜெனித்தனெனை கஸ்ட
மேவிலக்கிடெனை இனி
யேவுமக்கது தானடுக்காது மான்கரத்தினிலே பிடித்திடும்

5 கருணையின்கடலே இது
தருணம் பார்தனிலே எனை
காத்துரக்ஷித்திடாவிடிலுனை மூர்த்திக்குமுதல்வனெனப்பட

6 கரங்குவிக்கலாமா சிறந்
தான் குவிக்கபோமா எந்த
காலமும்மர வாதவன்சிறு பாலன் சின்னசாமிக்கருளும் தி

## 14. கோலாகாலலீலை-இன்பமே என்ற மெட்டு.

இராகம் - காம்போதி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

அண்ணுமலை ஜோதி காணுதே
அண்டருங்கண்டு வணங்கிடும்
தொண்டருமென்றும் பணிந்திடும் அண்

அநுபல்லவி அடுக்கு சந்தம்.

அரகரசிவகுருபரனென வுலகினிலெவர்களும்வணங்கிடும்
அப்பனெமெய்ப்பொருளொப்பிட தற்பரசிற்பரனைதோர்
அடியவரனுதினம்தொழுதிடும் முடிமிசையிருதறமுருகிடும் அ
ஆதிசிவனுய்விளங்கி வாதிகளுக்கேதுலங்கும் அ

சரணம்.

1 முப்பத்துமுக்கோடி தேவர்கொண்டாட
மூவாயிரம்பேர்கள் கீர்த்தனம்பாட
சுப்தரிஷிநாரதர் மத்தளம்போட
தத்தோம் தத்தோம் தமதருள்
சித்தர் பக்தர் கருளும் அ

2 கைலாசமலையின் கார்த்திகைதீபம்
கண்டுதெரிசனம் செய்வோர்க்குலாபம்
அகிலமெல்லாமரு ளாகுமச்சோபம்
அடியவரனுதினம் போற்றிட
கடிமலஃரெனமுனம் ஏற்றிட அ

3 தித்திக்குஞ்செந்தமிழ் திரிசைநகர்வாசன்
தீனதயாபர ஞானவிசுவாசன்
பக்திகருள்சின்ன சாமியின்நேசன்
பாரோர்புகள் பரமாநிதி
நேராயுரு வானபதி அ

## 15. செந்தாளம்பூ வுந்தேன் என்ற மெட்டு.

இராகம் - தேசிக பியாகு, தாளம் - ஏகம்.

பல்லவி.

கந்தமலர்பூங்கமிழும் கார்த்திகைநற்தீபமே

அநுபல்லவி.

1 அந்தோமுனிவர்போற்றும் அடியார்கருளையூற்றும்
அருந்தவப்பொருள் சிறந்தமாதவம்
பொருந்தவிந்திரு வுறந்தறமேவும் கந்த

2 வல்லவனென்றெல்லாமகிழ் தில்லைபுகழ்வாசனே
கல்லாலின் புடையமர்ந்தோன்
காமன்தனை யெரித்தோன்
கர்பகமெய்ப்பொரு ளானபரமனாய்
தர்ப்பரசிர்பர ஞானகுணாளனாய் கந்த

3 சித்தர் பத்தர் முத்தர்களும் திருவண்ணாமலைவாசனே
பித்தனென பேரெடுத்தோன்
பிள்ளைகறி தனையடுத்தோன்
பெண்ணைசுமந்துமே கண்ணப்பநெச்சியை
பண்பொடுபாகுகற் கண்டெனவுண்டிடும் கந்த

4 சந்ததமி ளெங்கும்புகழ் தமிழ் குணுதி நேசனும்
செந்தமி ளருளின்னேமி
திருசையின் சின்னசாமி

சிருவனுக்கருள் திறமும்தந்திடும்
அருணையில்திரு மலையாய்தோன்றிடும் கந்த

## 16. காக்ஷிகண் காக்ஷியே என்ற மெட்டு

இராகம் தேசிகம், தாளம் - ஆதி.

பல்லவி.

அண்ணுமலையானே ஆனந்த பூமானே அ

அநுபல்லவி

உண்ணுமுலையையிட பாகம் தரித்தோனே அ

சரணம்.

1 விண்ணவர்முனிவர்முதல் வேதங்கள்புகல்வோனே
வேதாந்தநாதங்களோதும் வித்தகர்பக்தரோனே
மண்ணுலகமாதியந்த மானுஷ்யமுதல்வோனே
மாலயனும்தேடிக்காண மாபெருகும்கீதனே

மாமலைசிகரம்பாதம் தேடி வைத்து
காமனையெரித்தமனம் நாடி அந்த
சோமனைத்தரித்தபுகழ் க்ரீடி செழும்
பூமலர்கரங்கள் கொண்டு சூடி

போற்றியேநின் நின்றேனே
கூற்றுவனைத் தானே
தூற்றியுதைத் தோனே
மாற்றறியா செம்பொன்னே அ

2 கைலாசமலையென காணும்பரஞ்சோதியே
கர்ப்பகமெய்ப்பொருளான அற்புதபிறைக்யாதியே
அகிலமெலாம்துதிக்கு மானதனன்னீதியே
ஆலகாலமுண்டசிவ ஞானகுருபோதியே

அன்புடனின்பாதமதை கண்டு வணங்கும்
சின்னசாமிசெந்தமிழை கொண்டு பாடினேன்
என்னுளுமுனைதொழுது நின்று நான்
என்னசெய்திருந்தபோதி லின்று

தான்பொருக்க தானே
நான்பணிந்திட் டேனே
மான்மழுகை யோனே
வான்மதியின் கோனே அ

## 17. தாகம் தீர்க்கும் என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

அண்ணமலையா வும தெண்ணமிறங்காதிருக்
கென்னகுற்றம் செய்தேனிப்போது
அரியய நிருவரும் மடிமுடி காணு தொரு அ

அநுபல்லவி.

உண்ணுமலை யெனென
உலகம் புகழும் மோன
ஓதியநர்பொருள் மூதலாதியெனவே விளங்கும் அ

பல்லவி எடுப்பு.

வள்ளாளனெனுந்தன் பிள்ளையென்லேவுலகு
யெல்லாம் புகழும் பரமேசா
வருபவ ருளமதி லனுதினம் புகழுரு அ

சரணம்.

அரகரசிவனெனும் மடியவர்பொருளெனும்
அன்பன்சின்ன சாமிக்கருள்ஞான
ஆலைகட லுலகினி லருமறை தனிலுரு அ

## 18. மடமானே வுன் நினைவால் என்ற மெட்டு.

பல்லவி.

அருளான பரஞ்சோதியே அதிபதியே அ

அநுபல்லவி.

1 தருணம் கார்த்திடவா
தயாபரனை யாவா
கருணையுடனே யெனை யாளுவாய் அதிபதியே அ

2 ஆண்டிகள் வேடம் பூண்டாய்
ஆனந்தமாக நின்றாய்
வேண்டினேனே யெனை யாளுவாய் அதிபதியே அ

3 புல்லாய் பிறந்தால் சாஸ்திரம்
போதுமுனது க்ஷேத்திரம்
சொல்வதும்பொய்யேயெனை யாளுவாய்அதிபதியே அ

பாலன் சின்னசாமி
பக்திக்கருளும் நேமி
ஆலமுண்டோனே யெனை யாளுவாய் அதிபதியே அ

## 19. இராமபஜனை ஹோதியா என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தானி தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

மாமலை ஜோதிவாசனே சிவகாசனே மா

அநுபல்லவி.

1 சோமனை தரித்தோனே துலங்குமாமழுகோனே
காமனை யெரித்தயீசனே சிவகாசனே மா

2 அருள்பெருங்குருவே ஆனந்தமருவே
திருவடி பணிந்தேன் ஞனே சிவகாசனே மா

3 கல்லோவுன் மனது கறையாதிருப்பதேது
தில்லையிலாடுமீசனே சிவகாசனே மா

4 தாயில்லாபிள்ளை போலே, தவிக்கிறேன் புவிமேலே
சேயனெனை காருமீசனே சிவகாசனே மா

5 சீர்திரிசையின் பூமி செந்தமிழ்சின்னசாமி
நேர்விளங்கிடும்வாசனே சிவகாசனே மா

## 20. அற்புத புதுமையான ரப்பர் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 திருவண்ணமலை கார்த்திகையின் தீபகூட்டம் நல்ல
தேவாதிதேவர்க ளனைவர்கொண்டாட்டம்
ஒருதரம்கண்டுதெரிசனம்செய்ய பாவமோட்டம்பெரு
உத்தமபக்தர்கள்வருவார் சிவகோஷ்டம் திரு

2 ஆண்டிகள்கோடான கோடிஆரபாரம் கூடி
ஆனந்தம்மானந்தம் பாடுவார்கள்நேரம்
தாண்டவசங்கீதமோடு தான்தேவாரம்மணம்
தயங்கிபாடிவருவார்க ளனேகசாரம் திரு

3 கல்லுமண்ணுய்பிறந்தாலும் மோக்ஷநாடு மிக
கற்றவருற்றவருற்ருேர் பொருள்தேடு
சொல்லும்புல்லாய் பிறந்தாலும்சுகநாடு அந்த
ஜோதிதனை கண்டவர்க்கு நல்லவீடு

கஜல்.

வெகுஜன கூட்டம்
வேதங்களான பாட்டம்
மிகதாசி யாட்டம்
மேனேர் புகழ் கொண்டாட்டம்
சித்திக்கும் இறப்பினில் சிவகாசம் திருசை
சின்னசாமி மொழிக்கிடு கரகோஷம் தி

## திருவண்ணுமலே மஹாஞானியாகிய
## சேஷாஸ்திரி சுவாமிகள்பேரில் கீர்த்தனம்.
## 21. தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

சேஷாஸ்தி ரிசுவாமியே சேஷாஸ்தி ரிசுவாமியே
சின்னசாமிததி யென்றும்போற்றும்துதி சே

அநுபல்லவி.

பூஜாதிரவியமே புவியோர்போற்றும்தவமே
பூதலமீதினி லேதுறவாகிய
மாதவனென்னும் மகாஞானியாகிய சே.

176295

தொகையறு.

ஆரியர்குலத்தினில் அவதாரபுருஷனாய்
அருள்வடிவானநாதா
கோரிடுமிப்பிறவி வாழ்க்கையற்றுசிவ
குணதிபஞன போதா

அநுபல்லவி எடுப்பு.

பக்தர்புகழுந்தீரா பாவலர்க்கருளுதாரா
பாசபந்தங்களின் ஆசையகற்றிடும்
தேசாதிருபர்கள் வாசம்புகற்றிடும் சே

## 22. பாலாபிஷேகம் என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - பைரவி, தாளம் - சாப்பு.

பல்லவி.

சேக்ஷாஸ்திரிசுவாமி தெரிசனமே செய்தால்
ஜென்மம்சாபல்ய விமோசனமே
காஷாயமணிந்த பூஷணமே அவரை
கண்டால்கலிதீறும் மாசனமே சே

அநுபல்லவி.

விட்டோபசுவாமி விமானத்திலேக
வேதம்புகழ்பிராம ணர்கள்முன்பாக
பட்டுபிதாம்பர முற்றோரன்பாக
பார்த்தாரனைவர் மனம்கழிப்பாக சே

தொகையறா.

பாரினில் சரிகைகிரிகை யோகஞானமுரு வானபூமான்
ஆரியர்குலாதி பதியான பரமானந்த சீமான்

முடுகு

பலகலைபுகளுரு திருவுறுவண்ணா
மலையுருபவனென விரிதருளுண்ணா
பாக்கியமுற்றேன் பணிபவமேற்றும்
சிலாக்கியமுடன் சின்னசாமிபோற்றும் சே

## 23. அம்பாள் ஞான அருளும் என்ற மெட்டு.

பல்லவி.

அருணைபூமி அருள் பிறகாமி சேஷாத்திரி
ஆனந்த சுவாமி ஞானத்தின்
கருணையின் நேமி வுலகு
காக்ஷியின் சாமி அ

தொகையறா.

மாசில்லா சிவஞான பூபனென வுலகமதில்
மகாத்மாவான தேசி
மாயப்பிற வாழ்கையை ஜீவகாருண்ய மென
மனதினிலெண்ணு வாசி

உலகுகாக்ஷி அரிந்தமாக்ஷி சின்னசாமி
உகந்த பெருமாக்ஷி காணுவோர்க்
கிலகி டும்சாக்ஷி திருவருள்
இனியபெரும் சூக்ஷி அ

மலைமீது இருக்கும்

## ரமண சுவாமிகள் பேரில் கீர்த்தனம்.

## 24. காந்தி மஹான்போலுண்டோ என்றமெட்டு

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

ரமணானந்த சாமி ஞான
மகாத்மா நிதி
ஜீவாத்மா பதி
யோகாத்மா மதி ரம

கண்ணிகள்.

ஔவனுதாரன் உண்மையின் தீரன்
உறுதியின் சிவகாக்ஷி அருள்மாக்ஷி
நிலைதேர்ச்சி ததியாக்ஷி

நித்திய நேயமான வதாரன்
பத்தி யாதாரமுரு தீரன்
சிவகாசந் தனையே சிந்தனை
வாசம் புகலால் வந்தனன்
செம்பொ ருளின் தங்கிய
உம்ப ருரப் பொருந்திய ரம

சிரபுரபூமி திருசின்னசாமி
தேன்மொழியருள் வாசன் புவிநேசன்
சிவபூஷன் பிறகாசன் தேசன் ரம

## 25. அம்பாள் மதுரை மீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம்-தேசிகம், தாளம்-ஆதி.

பல்லவி.

திரு மாமலைரமண சாமி அருள்
மாதவகுண பூமி விளங்கும்
மாசில்லாதவ நேமி
மறைநிபுண வாமி ம ம திரு

பெருங் காமக்குரோதமதை வெருத்து திரு
கயிலைமலையை யடுத்து தவத்தின்
கருணையெனும்பே ரெடுத்து
காக்ஷியன்பர் கருத்து கா கா திரு

தன் தாயாரிறந்தபின் சூக்ஷி மலையில்
சமாதியின்பெருங் காக்ஷி புகலுற
ஜலமும்பெருக லாக்ஷி
ஜனங்களுக்கோர் மாக்ஷி ஜ ஜ திரு

இந்த தேசம்புகலும்விசு வாசன் திருசை
செந்தமிழருள் நேசன் பாவலர்
சேவடிதொழுந் தாசன்
சின்னசாமியின் பாசன் சி சி திரு

## 26. துலங்கு செம்பொன் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

தெழிந்தஞானம் மோனமென விளங்கும்
தேவன்ரமணசாமி தெரிசனமிக காக்ஷியே
மாகாணைக்காண வருஞ்ஜெனம் பாரத்தாக்ஷியே

சித்தென உத்த ருத்தெனும் பத்தியில்—தே
தெரிதற் கரிதாய் சிருவுரு பருவம்—தே
தேடிவந்தடி யார்கள் நலம்பெற கூடிடும்—தே

சரணம்.

சரிகைகிரிகையோக ஞானப்பிரதாபன்
சகலகலைகள்வல்ல யூகப்பிறவாகன்
கரியுரித்தவனுட கருணையின் யோகன்
கார்த்திகைஜோதிப்பிர காசமுபாகன்
காணும்சின்னசாமி யூகன்
கலியுங் கேதகன்
தோணுமுருமயில் வாகன் தெ

## 27. இந்த உடலை நம்பி என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-சாப்பு.

1 இந்தஉலகில்ஜென்ம மரிதல்லவா
சிந்தைகலங்கிவாடும் குரும்பல்லவா இந்
வந்தவழியைநம்பி வகைகெட்டுவிம்மி
நொந்துஅழுதால்கும்மி நோகுமல்லவாபொம்மி இ

2 ஆசையெனுங்கடல் வலையில்பட்டு
மோசமடையலாமோ மோகத்தில்கெட்டு ஆ
தாசிகளைநம்பாதே தாயாரையும்வெம்பாதே
காசுபணங்கள்வந்தே கடனுய்யாதேதீதே இ

3 தந்தைதாயர் சொல்லை தடுக்கலாமா
மைந்தனெனும்ஆசை மறக்கப்போமா தந்

உந்தனக்கார்புத்தி உரைக்கலானுர்நந்தி
சந்தேகம்கொண்டால் சதமாகுமாமுத்தி இ
4 கருணைபுரிவாசன் கணமுற்றவன்
தருணம்பெரியோர்கள் தயவுற்றவன் கரு
திருநைநகர் பூமி சிருவன்சின்னசாமி
அருணைகிரி நேமி அருள்பெற்றவன்காமி இ

## 28. கழுகுமலைக்குநாம் நேராய் என்ற மெட்டு.

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

மனமமேநீகெட்டு போகாதே வஞ்ச
மாதர்களின்சேதி ஆதாராமாயோதி மன

அநுபல்லவி.

1 தினம்பணிவார்கள் வுனைபிரியேனென்று
செத்தாலுங்கூட மடிகுவேநானென்று
இனமானகதைகளை படித்துறவாய்நின்று
யெப்படி யாகிலு முந்தனை
ஒப்புற வாகுவார் சிந்தனை மன

2 அங்கமெல்லாம்உற்று பார்த்தால்பெருநாற்றம்
அவர்களுருவோமுன் வூழ்வினையின்தோற்றம்
சங்கையில்லாபெண்கள் கண்ணில்ஜலமூற்றும்
சதிகாரிகள் கதையைபேசி
மதியோதுவா ரதைமுன்யோசி மன

3 உச்சிட்டதையமுர்த கட்டியென்றாயே
ஊத்தவாயை பவ பெட்டியென்றுநீயே
பிச்சக்காரன்கதை படிக்கேநென்றாயே
பித்தம் சித்தம் திரும்பு
நித்தம் சுத்தம் விரும்பு மன

4 மாதர்கள்நின்னை மகிழ்நேசம்செய்வார்
பனைப்போலேகாசுகள் பரித்துபின்வைவார்
பாதகத்துக்கஞ்சா மோசமும்செய்வார்
பாவிகளை யொருபோதுமே
ஆவியென வேநம்பியே மன

5 எங்குமங்கள குணாகரநேமி
இன்பரசந்தரும் திரிசையின்பூமி
பொங்குந்தமிழ்பெரும் புகழ்சின்னசாமி
புத்திக்கரு ளட்டியது
பத்தியுடன் புகட்டியது மன

## 29. மாரன் வாதையினால் என்ற மெட்டு.

இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

நெஞ்சே சஞ்சலமேன் அந்த
பஞ்சபூதங்களூ மஞ்சுமிருக்கையில் நெ

அநுபல்லவி.

1 தஞ்சமென்றுகாமக் குரோதலோபமோகம்
தனேராககதி பதிமூன்றோடுசோகம்
மிஞ்சியமாயவலை குட்பட்டதால்னேகம்
மேதினியில் பலபேர்கள்
நீதியுராய் பேசினார்கள் நெ

76295

2 தந்தைசொல்மிக்கமந் திரமில்லையென்று
தானுரைப்பவை தவிர்த்துமேசென்று
விந்தையாகதாசி வீடேகதியென்று
வேணபொருள் போனதினல்
ஈனசொர்க ளானதினல் நெ

3 காசிருந்தால்கன மாகபேசுவார்கள்
கையிலில்லாவிட்டால் பிணமென்றேசுவார்கள்
பேசும்சபைக்குநீ யேன்வந்தாயென்பார்கள்
பெண்டுபிள்ளை மதியார்கள்
கண்டவிட மேசுவார்கள் நெ

இங்லீஷ்-நோட், தாளம்-ஆதி.

## மங்களம்.

வேதமுதலோது நல் விநாயகற்குமங்களம்
விண்ணவர்முனிவரருள் அன்னையர்க்குமங்களம்
காதலாய்வள்ளி மணந்த கந்தனுக்குமங்களம்
கங்கையையணிந்தசிவ சங்கரர்க்கு மங்களம்
மாதவத்திலே வுதித்த மங்கையர்க்கு மங்களம்
மாயனைவிளங்கு திரு மால்தனக்குமங்களம்
பூதலம்புகழும் பாவர் யாவர்க்கும்மங்களம்
போற்றினேன்சின்ன சாமி சொல் புவியோர்க்கு மங்களம்

மங்களம் ! மங்களம் ! ! மங்களம் ! ! !

சிவபஜனே கீர்த்தனம் முற்றிற்று.

---

இப்புத்தகமும் இன்னும் அதி நூதன புத்தகம் தேவையானல்,

எமது விலாசம்;—**S. T.** மாணிக்க நாயகர்,

இராமலிங்கம் அண்டு கம்பெனி, சூளை ஐரோட், மதராஸ்.

## இந்து தேகாப்பியாச சாதனம்.

இது தேகதத்துவ அவயவங்களின் அத்தியாவசியத்தை தெரிவித்து சரீரத்தை பலமாகவும், சௌக்கியமாகவும் போஷிப்பதற்கான அப்பியாசமுறைகளை படங்களுடன் விவரித்திருக்கின்றது. இதன் விலை அணா 0 8 0

**ஸ்ரீராம பாராக்கிரமம்:**—இது ஓர்சிறந்தபக்திநூல். பாலர் பாலிகைகள்முதல்சகலரும் எளிதில் வாசிக்கத் தகுந்த செந்தமிழ் நடையில் இராமாயணம் முழுசரித்திரமும் அடங்கியுள்ளது. அணா 6.

**நவரத்தின ஒப்பாரி**—இதில் ஸ்திரீகள் துக்கிக்கும் ஒப்பாரிகளும், மன்மதன் ரதி வாக்குவாதமும், இரதிதேவியின் புலம்பலொப்பாரியும் மன்மதன் எரிந்தான் எரியவில்லை யென்ற சந்தேக நிவர்த்தி லாவணியு மடங்கியிருக்கிறது.

விலை அணா 5.

**ஸ்ரீ கேதாரீஸ்வரவிரதமகிமை** இப் புத்தகம் ஒவ்வொருவரிடமும அவசியம் இருக்க வேண்டும். விலை அணா 2.

**பழனியாண்டவர் பக்திரசக் கீர்த்தனம்:**--நவீன டிராமா மெட்டில் திருப்புகழ் சந்தப்பாக்களும், நூதனவர்ன மெட்டுகளும் நிரம்பப்பெற்றுள்ளதால் எல்லாராலும் புகழப்பெற்றது. அணா 4.

**இல்லறமாலிகா:**—இதில் சகலரும் அநுஷ்டித்து வரும் பண்டிகை, நோன்பு, விரதம் முதலியவைகளின் சவிஸ்தாரத்தை விளக்கியிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டிய ஓர் சிறந்த பொதுநூல். விலை அணா 6.

**டெய்லரிங் அண்டு கட்டிங்:**-கோட்டு முதலிய உடுப்புகளை வெட்டுவதற்கான பிளான்களும் கணக்குகளும் உள்ளது. விலை ரூ 1.

புலிப்பாணிமுனிவர் வயித்தியம் 500 மூலமும்-உரையும் கைபாக செய்பாக மர்மங்களுடன் இதன் விலை அணா 12.

# THE ENGLISH TEACHER

# ஆங்கில போதகன்

தமிழ் உச்சரிப்பைக்கொண்டே
இங்கிலீஷ் ஞானத்தை புகட்டும் துணைவன்.

உபாத்தியாயரின் உதவியில்லாமல் அதிக சுலபத்தில் இங்கிலீஷ் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

இங்கிலீஷ் எழுத்துக்களையும், பதங்களையும், வாக்கியங்களையும் தகுந்தவாறு தமிழ் உச்சரிப்பைக்கொண்டே இலேசில் போதிக்கும் அருமையான போதனமுறைகள் இப்புத்தகத்தில் அமைந்திருப்பதுடன், அப்பதங்களுக்கும் வாக்கியங்களுக்கும் ஏற்றவாறு தமிழ் மொழிபெயர்ப்பும் நன்றாய் காட்டப்பட்டிருக்கின்றது. உலக அனுபவத்திற்கு வேண்டிய ஒவ்வொரு விவகாரத்தைச்சேர்ந்த பதங்களைப் படிப்படியாக எடுத்துக்காட்டி அப்பதங்களைக் கொண்டே வாக்கியங்களையும் விவரித்தி[illegible]ப்பதால் ஆங்கிலம் கற்பவர்க்கு இப்புத்தகம் அதிக பயன்தரக்கூடியதாகும்.

திக்குக[illegible]தம் காலிகோபயிண்டு **656**-பக்கங்கள் கொண்ட
பெரிய புத்தகம் விலை ரூபா **2 0 0**

இதிற் குறித்துள்ள புத்தகங்கள் தேவையானால் அடியிற் குறித்துள்ள விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

---

எமது விலாசம்:—

எஸ். டி. சாமி அண்டு கம்பெனி,
சூளை போஸ்ட், சென்னை.

9A
5-23